**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 6 August 2021

## செய்திக்கொத்து

# என்யுஎஸ் மாணவர்களுக்கு முன்னோடி கொவிட்-19 பரிசோதனை

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக (என்யுஎஸ்) மாணவர்களும் அலுவலர்களும் புதியதொரு கொவிட்-19 பரிசோதனை முறையை வரும் 10ஆம் தேதி முதல் தங்களைத் தாங்களே செய்து பார்ப்பார்கள். விரைவு மற்றும் எளிது (FET) என்னும் அடிப்படையிலான அந்த முன்னோடி பரிசோதனை முறையை விளக்கி மாணவர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை ஒன்று 'ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' செய்தித்தாளின் கவனத்துக்கு வந்தது. பரிசோதனைச் சாதனம் ஒன்று மாணவர்களுக்கும் அலுவலர்களுக்கும் கொடுக்கப்படும். பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருப்பவரா என்பதைப் பொறுத்தும் தடுப்பூசி போட்டுக்கொண்ட விவரத்தைப் பொறுத்தும் அவர்கள் அந்த சாதனம் மூலம் தங்களைத் தாங்களே பரிசோதித்துக்கொள்ளலாம்.

பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருக்கும் மாணவர்களும் அலுவலர்களும் இரண்டு தடுப்பூசிகளையும் போட்டிருந்தால் மாதம் ஒருமுறை அவர்கள் பரிசோதனை செய்துகொண்டால் போதுமானது. அதேநேரம் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களும் ஒரு தடுப்பூசி மட்டும் போட்டுக் கொண்டவர்களும் வாரா வாரம் கொவிட்-19 பரிசோதனை மேற்கொள்வார்கள்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.